Registered as a Newspaper in Ceylon ** விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 87

போன் 889 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 26 முஹறம் 28 செவ்வாய்க்கிழமை [9-5-67]

## 'வெள்ளையறிக்கையல்ல; மாவட்டசபை மசோதாவருகிறது'

முல்லைத்தீவு, திங்கள்

மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதாவிரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறதென்றும் யார் இதை எதிர்த்தாலும் எவர் இதற்கு இடையூருக இருந்தாலும் அதுமசோதாவருவதை ஒருபோதும் தடைசெய்யப்போவதில்லையென்றும் முல்லைத்தீவில் நடந்த தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சித்தலைவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

மாவட்டசபைகள் பற்றி வெள்ளையறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்படமாட்டாதென்றும் நிச்சயமாக மசோதாவே சமர்ப்பிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டதாம்.

அவசரப்படாது சிறிது பொறுமையாக இருக்க வேண்டுமென்றும் தலைவர்கள் கூறியதாகத்தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் நிலையை மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் விரைவில் பிரசாரக் கூட்டங்கள் நடத்துவதென்றும் செயற்குழு முடிவு செய்ததாக அறியப்படுகிறது.

# மாவட்ட சபைகள் – சிறுமாறுதல்களுடன் மசோதா அங்கீகாரம்?

## நிதி விவகாரம் இன்னும் முடிவில்லை

### எம். பி. க்கள்; உள்ளூராட்சி பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**மாவட்டசபைகள் சமபந்தமான மசோதா பாராளுமன்றம கலைக்கப்படுவதற்கு முன்னதாக பிரதமரினுல் சமர்ப்பிக்கப்படுமெனவும மசோதாவின் மூன்று வாசிப்பு கட்டங்களும இப்பாராளுமன்றக் கூட்டத் தொடரிலேயே நடைபெறுமெனவும தெரியவருகிறது.**

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது போலல்லாமல் மாவட்டசபை அமைப்பதில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அண்மையில் பிரதமர் - தமிழரசுத் தலைவர்கள் சந்திப்பில் ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மாவட்டசபையைச் செயற்படுத்துவதற்கான நிதி வசதி மத்திய அரசாங்கத்திஞல் எந்த அடிப்படையில் வழங்கப்படவேண்டுமென்ற விவகாரம் இன்னமும் பூர்த்தியாகவில்லையென்றும் இதுசம்பந்தமாக தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாமெனவும் அறியப்படுகிறது.

மாவட்டசபை மசோதாவை விரைவில் செயற்படுத்தும் நோக்கத்தின் காரணமாக ஏற்கனவே மசோதாவில் சேர்க்கப்பட்ட சில பகுதிகள் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இச்சபையில் அங்கம் வகிக்க இம்மசோதாவில் தற்பொழுது வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

பிரிட்டிஷ் விசாரணைக் குழு வினரிடம்

## ஆசிரியபயிற்சி மாணவர்கள் தெரிவித்துள்ள யோசனைகள்

யாழ்ப்பாணம், செவ்.

ஆசிரிய கலாசாலையில் சேரும் ஆசிரியர்கள் 8 வருடங்கள் ஆசிரியர்களாகக்கடமையாற்றவேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு சம்பளத்துடன்கூடிய லீவு பெற முடியாதிருக்கின்றனர் இதனுல் தமது கல்வியை விருத்திசெய்து பட்டதாரிகளாகவோ வேறு உயர்ந்த பட்டப்படிப்பையோ படிப்பதற்கு முடியாதநிலையிருக்கிறது. இந்தநிலை மாற்றப்படவேண்டும்.

இலங்கையிலுள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக பிரிட்டனிலிருந்து இலங்கை வந்துள்ள ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விசாரணைக் குழுவினர் நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு விஜயம் செய்தபோது கலாசாலை அதிபர் திரு. எஸ். ஜே. அரசரத்தினம் தலைமையில் விரிவுரையாளர்களும் பயிற்சிபெறும் ஆசிரியர்களும்அக்குழுவினர் முன் சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள்தெரிவித்த மற்ற ஆலோசனைகள் வருமாறு;

இப்போது நடைமுறையிலிருந்து வரும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5-30 மணிவரையான கலாசாலை நேரத்தைமாற்றி காலை 8 மணி தொடக்கம் மாலை 3-30 மணிவரை வகுப்புகளை நடத்தவேண்டும்.

பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்படுவோர் ஜி. சி. ஈ. பரீட்சையில் தெரிவுப் பாடங்கள் மூன்றிலாயினும் சித்தியடைந்தோராக இருத்தல் வேண்டும் என்ற நியதி இருக்கவேண்டும்.

இப்பரீட்சைக்கு இப்போது கட்டாய பாடங்களாக இருந்துவரும் 12 பாடங்கள் குறைக்கப்படவேண்டும்.

கலாசாலைகளில் சிறந்த நூல் நிலையங்களையும் விஞ்ஞான ஆய்வுகூடங்களையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

இறுதிப் பரீட்சையின் போது விஷயஞானத்தைப் பரீட்சிப்பதிலும்பார்க்க கற்பிக்கும் முறையையே பரீட்சிக்கவேண்டும்.

கடும் மழையால்

## காலி, பத்தேகம பகுதியில் போக்குவரத்து துண்டிப்பு

### பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ரூ. 10 ஆயிரம் ஒதுக்கீடு

கொழும்பு, திங்கள்

காலி, பத்தேகம ஆகிய பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் பெருமழையின் காரணமாக இப்பகுதியில் போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. டெலிபோன் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

அகலியா, வெலிவிட்டியா, ஹும்மெலியா, உணவிட்டியா, அக்மீமனை, ஜிந்தோட்டை, லபுதுவை, உலுவிதிகி, வக்காவெலை ஆகிய கிராமங்கள் வெள்ளத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் பலநூற்றுக்கணக் கோனர் வீடுகளை இழந்துள்ளனர். வீடுகளை இழந்த மக்கள் கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக 10 ஆயிரம் ரூபா இப்போது ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதைக் காலிக் கச்சேரி மூலம் வழங்க காலி அரசாங்க அதிபர் ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ரத்மலானையில்**

கொழும்பில் தொடர்ந்து பலத்த மழை பெய்து கொண்டிருக்கிறது. ரத்மலானையில் 5 அங்குல மழை பெய்ததாக வானிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது.

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் என்றும் அவ்வானிலை நிலையம் தெரிவித்துள்ளது.

## ஐசனேவருக்கு சுகவீனம்

வாஷிங்டன், மே 8

முன்னுள் அமெரிக்க ஜனுதிபதி திரு. ஐசனேவர் சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஐசனேவருக்கு இப்போது வயது 76.

## இவர்களுக்கும் அடையாளஅட்டை

புன்னலைக்கட்டுவன், திங்.

பொதுத்தராதரப் பத்திர வகுப்புப் பரீட்சைகளில் மேற்பார்வையாளராகவும், நிரந்தர நோக்குநராகவும் கடமையாற்றுவோர் இனிமேல் அடையாளஅட்டைகள் வைத்திருக்கவேண்டுமெனக் கல்வித் திணைக்களம் ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

## கடலின் அடியில் வாழ்வதற்கு உருக்கு வீடு

மாஸ்கோ, மே 8

கடலின் அடித்தளத்தில் மனிதன் வாழ முடியுமா என்ற பரிசோதனையில் ரஷ்யா தீவிரமாக இறங்கவிருக்கிறது.

இந்தப் பரிசோதனைக்கு உருளை வடிவிலான வீடு உபயோகப்படுத்தப்படவிருக்கிறது,

கருங்கடலின் அடியில் இந்தப் பரிசோதனையை இந்த வருடத்தில் நடத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

## பயிர் நஷ்டத்துக்கு பணம் இல்லையாம்

### விண்ணப்பங்கள் உரிய நேரத்தில் வராததேகாரணம்

யாழ்ப்பாணம், செவ்.

உருத்திரபுரம் கமக்காரர்கள் அண்மையில் தமக்கு ஏற்பட்ட பயிர் நஷ்டத்திற்காக பணம் தருமாறு கோரி விண்ணப்பங்களை உரிய காலத்தில் அனுப்பியிருந்தும் கூட பணம் தர முடியாது என விவசாயப்பகுதி ஆணையாளர் கமக்காரர்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிகின்றது. இதனுல் இப்பகுதிக் கமக்காரர்கள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளார்கள்.

இது சம்பந்தமாக உருத்திரபுரம் விவசாயிகள் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்திடம் சென்று முறையிட்டுள்ளார்கள் உருத்திரபுரம் விவசா

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''எல்லாப் பொறுப்புகளையும் என்னிடமே விட்டுவிட்டு என்னையே தஞ்சமடைக. எல்லாப் பாவங்களிலிருந்தும் உங்களை விடுவித்துவிடுகின்றேன். துக்கப்படவேண்டாம்.''

—பகவத்கீதையில் பரமாத்மா.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு சித்திரை மீ 26உ (9-5-67)

### ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்

இந்திய ஜனதிபதியாகக் கடந்த ஐந்தாண்டு காலம் பதவிவகித்த டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் தமது பதவிக்காலம் முடிந்து ஓய்வு பெறுகிறார். இந்தியப் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் நேற்றுமுன்தினம் அளித்த பிரிவுபசாரம், அவர் மீது இந்திய மக்கள் வைத்துள்ள அன்புக்கும் மதிப்புக்கும் எடுத்துக்காட்டாக இருந்தது. ஒரு நாட்டின் மிக உயர்ந்த பதவியான ஜனதிபதி பதவியை [இந்தியாவில் ராஷ்டிரபதி] வகித்ததன் மூலம் அந்தப் பதவிக்கே பெருமையையும், மதிப்பையும், உயர்வையும் தேடிக்கொடுத்திருக்கிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன். 'பதவிகளில் இருப்பதால் பலர் பெருமை பெறுகிறார்கள்; சிலரால் பதவிகள் பெருமையடைகின்றன.' இந்தச் சிலரில் முக்கியமானவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்

உலகில் இன்று உயிர் வாழும் தலைசிறந்த தத்துவஞானிகளில் ஒருவர், உலகமக்களின் அபிமானத்தையும் மதிப்பையும் பெற்றவர், அறிஞர், தெளிந்த சிந்தனையும் திடமான உள்ளமும் கொண்டவர், மலை அசைந்தாலும் நிலைகுலையாத உறுதிபடைத்தவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

இந்திய—சீன எல்லையில் சண்டை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் யுத்தம், இவை தவிர கிழக்குப் பாகிஸ்தான் வகுப்புக் கலகத்தின் எதிரொலியாக வட இந்தியாவில் சில பகுதிகளில் இனக்கலகம், தென்னிந்தியாவில் மொழி உரிமைக் கிளர்ச்சி வெறியாக மாறிப் பெரும் கலகமாக உருவெடுக்கிறது, வெள்ளமும் வரட்சியும் அதன் விளைவாகப் பசியும் பட்டினியும் மக்களை வாட்டுகிறது. இந்தத் தொல்லைகள் போதாவென்று இந்திய மக்களின் பெருந்தலைவனும் வழிகாட்டியுமான பண்டித ஜவஹர்லால் நேரு மறைந்தார். அவருக்குப்பின், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சமாதானப் பிரியர் லால்பகதூர் சாஸ்திரி திடீரெனக் காலமானார். இத்தனை சோதனைகளிலும் மனத்தளர்ச்சியடையாது, அரசாங்கத்துக்குத் தகுந்த ஆலோசனை கூறிச் சமாளித்த பெருமை டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சாரும். இந்த உயர்ந்த உன்னதமான பதவிக்குப் போட்டியே இல்லாமல் மீண்டும் அவரையே இந்திய மக்கள் தெரிவுசெய்திருந்தார்களானால் இந்தியாவின் மதிப்பு மேலும் பன்மடங்கு உயர்ந்திருக்கும்.

ராஷ்டிரபதி பதவி வெறும் 'பொம்மை' யல்ல

# கிழக்கும் மேற்கும் போற்றும் ஒப்பற்ற தத்துவ ஞானி

## ராஷ்டிரபதி பதவியிலிருந்து ஓய்வுபெறும் டாக்டர் ராதாகிருஷ்ணன்

மதத்தை அணுகும் முறையிலுஞ்சரி மதத் தத்துவங்களின் அமைப்பிலுஞ்சரி கிழக்கத்திய நாடுகளும், மேற்கத்திய நாடுகளும் அடிப்படையிலே பல முரண்பாடுகளைக்கொண்டு விளங்குகின்றன. இத்தகைய வேற்றுமைகளுக்கிடையிலும் எந்த மதங்களாயிருந்தாலும் அவற்றைப் பாரபட்சமற்ற தன்மையோடு ஒப்புநோக்கி அவற்றிடையே ஒற்றுமையைக் காணவிழைவார் மிகச்சிலரே.

ஒவ்வொரு மதபோதகர்களும், மத விமர்சகர்களும் உண்மையை உண்மைக்காக அணுக விரும்பாது தத்தம் சார்புக் கொள்கைகளையே உண்மையென நிலைநாட்ட விரும்பும் இன்றைய காலகட்டத்தில் உண்மையை உண்மைக்காக அணுகும்தத்துவ ஞானிகளிலே டாக்டர் இராதாகிருஷ்ணனே சிரேஷ்டமானவர் என்பது மதசமரச விமர்சகர்களின் ஏகோபித்த முடிவாகும்.

தனது இணையற்றதர்க்கத் திறமையாலும், ஆற்றொழுக்கைப்போன்ற ஆங்கிலப் பேச்சுகளினாலும் பிறமதங்களை உதாசீனம்செய்ய விரும்பாத விரிந்த கண்ணோட்டத்தினாலும் தனக்கு ஒப்பார் எவருமின்றிவாழும் டாக்டர் ராதா கிருஷ்ணன் இந்திய ஜனதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். இத்தகு சூழ்நிலையில் அன்னாரின் வாழ்க்கையையும் கொள்கையையும்பற்றி சிறுகண்ணோட்டமாவது செலுத்தவேண்டியது அவசியமாகும்.

1888-ம் ஆண்டிலே தென்னாட்டிலுள்ள சித்தூர்மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணியிலே பிறந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள்



மதங்களைக் கவினுற அறியும் திறன்பெற்று விளங்கினார். அச்சிறப்பினாலேயே வாலிப வயதில் மதப் பேராசிரியர் பதவியும் அவரை வந்தடைந்தது. இவ்வாறாக டாக்டர் இராதா கிருஷ்ணனின் தெளிந்த கண்ணோட்டத்திற்கு சுவாமி விவேகானந்தரின் மெய்ஞ்ஞான வழியே காரணமெனக் கூறலாம்.

ஆயிரக்கணக்கான மதங்களும், சடங்கு முறைகளும் உலவும் இவ்வுலகில் எமக்குத் தேவையானது இனங்களுடன் இனம், நாடுகளுடன் நாடு, மதங்களுடன் மதம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதேயாகும். ''மானிட சமுதாயம் மேலான குணச் சிறப்பை

(விஜயா விந்தன்)

அடையமுடியும் என்ற நம்பிக்கையும், முடிவில் உலகின் எல்லா மனிதர்களுமே பரஸ்பரம் சந்தேகங்கள் நீங்கப்பெற்று, ஒருவரையொருவர் புரிந்து வாழ்வர் என்ற கனவுமே மனிதர்களின் ஏக இலட்சியமாக இருக்கவேண்டும்.''

இவ்வாறு உலகினதும், வாழும் மனிதரினதும் சுபீட்சவாழ்வுக்கு வழிகாட்டும் இராதாகிருஷ்ணன் அவர்கள் ''கிழக்கும் மேற்கும் ஒரு பொது மததத்துவத்தில் இணையவேண்டும் என்ற சுவாமிஜி விவேகானந்தரின் கனவை நனவாக்க விழைபவராக இருக்கிறார்.

பேதங்களாலேயே பேதலித்துப்போன இவ்வுலகில் நாத்திகம் தலைவிரித்தாடும் இன்றைய சூழ்நிலையில் — போர்வெறி மனிதர்களைப் பற்றி அழுத்துகின்ற இந்நாட்களில், தேசங்களோடு தேசம் சமாதான விருப்போடு சாந்திவழியிற்செல்ல, உலக மதங்கள் தத்தமக்கிடையே செளஜன்ய மனப்பாங்கை ஏற்படுத்த அன்புத்தீபத்தை ஏந்திச் செல்லும் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து சத்தியமும் சமாதானமும் நின்றுலவ உழைப்பாராக.

என்பதை டாக்டர் ராதாகிருஷ்ணன் எந்தெந்தச் சமயத்தில் எதையெதைச்சொல்லவேண்டுமோ அதனை அந்தச் சமயத்தில் அச்சமின்றி வெளிவெளியாக எடுத்துரைத்துச் சுட்டிக்காட்டியதன் மூலம் உணர்த்தியிருக்கிறார். ஜனநாயகத்தில் மக்கள் பிரதிநிதிகள் ஒழுக்கமும், நேர்மையும் உள்ளவர்களாக இருந்தால்தான் மக்களும் அப்படியிருப்பார்களென்பதை டாக்டர் ராதாகிருஷ்ணன் பலதடவைகளிலும் சுட்டிக்காட்டியிருந்தார். நேற்றுமுன்தினம் மாலை இந்தியப் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் தமக்களித்த பிரிவுபசார வைபவத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசுகையில் கூட, 'அரசியல்வாதிகள் பதவியையும், கௌரவத்தையும் தேடிச் செல்வதையே தமது நோக்கமாகக் கொண்டிருக்காது ஏழை எளிய மக்களின் கஷ்ட நஷ்டங்களை நீக்குவதற்கான உதவியைச் செய்வது தமது கடமை என்பதை உணர்ந்துசெயலாற்றவேண்டும்'' என்று கூறியிருக்கிறார். இது இந்தியாவிலுள்ள அரசியல்வாதிகளுக்குமட்டுமல்லாது நமது நாட்டிலுள்ள அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். டாக்டர் ராதாகிருஷ்ணனின் ஆலோசனைகளும் அறிவுரைகளும் நம்நாட்டவரின் கண்ணையும் திறந்து, கருத்தையும் கவரவேண்டும்.

---

சங்கானை, திங்கள்

சங்கானைக் கிராமக் கோர்ட்டில் பல வருடங்களாகக் கடமையாற்றிய நீதிபதி திரு. யோன் பற்றிக் இம்மாதம் 7-ந் திகதி தொடக்கம் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். இவ்விடத்திற்கு திரு. ஹேமன் வன்னியசிங்கம் தற்காலிகமாக நியமிக்கப் பட்டுள்ளார்.

### உற்பத்தியில் ஒரு சாதனை

நாரந்தனை, திங்கள்

செத்தல் மிளகாய் உற்பத்தியில் அனலைதீவைச் சேர்ந்த திரு. சங்கரப்பிள்ளை ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார். ஏக்கர் ஒன்றுக்கு 12 அந்தர் செத்தல் மிளகாயை அவர் உற்பத்தி செய்தார். அண்மையில் அனலைதீவுக்கு சென்ற அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா சங்கரப்பிள்ளையைப் பாராட்டி தொடர்ந்து மிளகாய்ச்செய்கையில் ஈடுபட்டுமிளகாய்த் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க உழைக்கும் வண்ணம்கேட்டுக் கொண்டார்.

[5-ம் கலத்தொடர்ச்சி]

சாஸனத்துக்கு முரணில்லாத வகையில் இப்பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்பதால், இம்மசோதாவை சிறிமாவைக் கொண்டே இறைவன் எதிர்க்கச் செய்துள்ளார் போலும். எல்லாம் அவன் செயல். நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே. ஏன் இதுபற்றி யாரும் கவலைப்பட வேண்டும்?

ஃ ஃ ஃ

தேயிலை விலை உலக மார்க்கெட்டில் குறைந்துள்ளது. ஏன்? பொருளாதார நிபுணர்கள் பல காரணங்கள் கூறலாம். ஆனால் யாரும் கூறாத புதிய காரணமொன்று எனக்குப்படுகிறது. தேயிலையை உற்பத்தி செய்பவர்களின் மனம் வேதனைப்படுமாயின் அது இப்படியான விளைவுகளைச் செய்யும்தானே! அந்த உழைப்பாளிகளுக்கு மனித உரிமைகளை அளித்து அவர்களது மனதைக் குளிரச் செய்தால் தேயிலை, ரப்பர் முதலியவற்றுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன் இங்கு அரிசி உற்பத்தியும் அதிகரித்து, பிறநாடுகளிடம் பல்லைக்காட்டவோ, நமது செல்வத்தை அனுப்பி வைக்கவோ தேவையிராது என்றே படுகிறது. ஆனால்...

ஃஃ

காண்டு நம்பி கழற்சேவடி என்றுங், கலந்துணைக் காதலித்தாட் செய்கிற்பாரை, ஆண்டு நம்பி அவர்முன் கதிசேர அருளும் நம்பி குருமாப் பிறை பாம்பைத், தீண்டு நம்பி சென்னியிற் கன்னி தங்கத், திருத்து நம்பி பொய்ச் சமண் பொருளாகி, ஈண்டு நம்பி இமையோர் தொழு நம்பி. எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[நம்பியாகி உனது கழல் அணிந்த திருவடியைக் காண்போம் என்னும் உறுதியோடும் மனம் பற்றி உன்னை விரும்பி உனக்கு ஆட்செய்கின்றவரை நீ ஆட்கொண்டு அவர் விரைந்து உயர் கதி அடையுமாறு அருள் செய்கின்ற நம்பி, ஒளியை உடைய சிறந்த பிறை பாம்பைப் பொருந்துகின்ற முடியில், கங்கை என்னும் நங்கை தங்கும்படி இனிதுவைத்துள்ள நம்பி, சமணர்க்கு பொய்ப் பொருளாய் மறைந்துநின்று, எங்கட்கு மெய்ப் பொருளாய் வெளி நிற்கின்ற நம்பியே தேவர்கள் வணங்குகின்ற நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.]

## ஐயாறன் எழுதுகிறது

''டைம்ஸ்'' பத்திரிகையில் விஜயசோமா என்பவர் அருமையான ஒரு கார்ட்டூன் படம் போட்டிருக்கிறார். இந்தியா-இலங்கை மசோதா என்ற ஒரு விகாரமான காலில்லாக் குழந்தையைப் பிரதமர் டட்லி சேனநாயகா தூக்கிப் பிடித்துக் கொண்டு, எதிர்க்கட்சித் தலைவரான சிறிமா பண்டாரநாயக்காவிடம் கொடுக்கப் போகிறார். அந்தக் குழந்தையும் ''அம்மா'' என்று சிறிமாவிடம் செல்லத் தாவுகின்றது. பிரதமரும் தன் சட்டைப்பையிலே குழந்தைக்கு பால் ஊட்டும் புட்டியை வைத்துக் கொண்டிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ இரு கைகளையும் தூக்கி ''வேண்டாம் வேண்டாம், இது என்னுடையதல்ல'' என்று விசுவாமித்திரர்போல் மறுக்கிறார். இந்தக் கேலிப் படத்தைப் பார்த்தால் சிறிமாவே தனது புதிய நிலைபற்றி என்ன நினைப்பாரோ!

ஃ ஃ ஃ

இலங்கையின் பிரதமராக இருக்கும்போது டில்லி சென்று ஸ்ரீமாவோ தான் இந்த ஒப்பந்தத்தை சாஸ்திரியுடன் உருவாக்கி கையெழுத்திட்டது. அவரே இந்த ஒப்பந்தத்தை இப்போது எதிர்க்கிறார். இது கட்சி விஷயமல்லவென்றும் தேசிய விஷயமென்றும் கருதி, டில்லியிலிருந்து கொழும்பிலிருந்த டட்லியுடன் பேசி, ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு திரும்பினார். அவரே இப்போது தாம் செய்து கொண்ட ஒப்பந்தம் அமுலுக்கு வராமல் எதிர்ப்பது அரசியலில் பெரிய விபரீதமாகும். பௌத்த பெரிய குருமார்களும் இதை எதிர்க்க ஆவேசத்துடன் கிளம்பியுள்ளதால் இந்த ஒப்பந்தம் உயிர் பிழைத்து, அமுலுக்கு வருமென்று இனி எதிர்பார்க்க முடியுமா? மிக மிக சந்தேகமே.

ஃ ஃ ஃ

இதைப்பற்றி நேற்று ஓர் அன்பர் மிக ஏமாற்றமும் வருத்தமும் தெரிவித்தார். இவ்விரு தலைவர்களும் மோதிக் கொண்டு, இலங்கை இந்தியர் பிரச்னை தீராமலேயே போய்விடுமோ என்று கவலைப்பட்டார்.

ஆனால் இந்த ஒப்பந்தத்தை தமிழரில் ஒரு சாரார் எதிர்த்து வருகின்றனர். இந்நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர்களை, இங்கிருந்துவெளியேற்றுவது மனித தர்மமல்லவென்றும் அதுவும் பஞ்சம் பட்டினியால் கஷ்டப்படும் ஒரு நாட்டுக்கு அனுப்புவதென்பது அவர்களுக்குச்செய்யும் பாவமென்றும் கருதி ஒப்பந்தத்தைக் கண்டிக்கின்றனர். ஆனால் ஐந்தேகால் லட்சம் பேர்களைக் கட்டாயமாக இங்கிருந்து அனுப்பிவிட வேண்டியதுதான் என்றும் கட்டாயப்படுத்தாத மசோதாவைத்தாம் எதிர்ப்பதாகவும் கர்ஜனை செய்கிறார்.

மனித உரிமை சாஸனப்படி ஒருவர் தாம் பிறந்த நாட்டில் சரிசமமாக வசிக்க உரிமை பெற்றவராவர். அதற்கு மாறாக இந்த ஒப்பந்தம், இங்கு பிறந்தவர்களில் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்டவர்களை வெளியேற்றுவதாக இருக்கிறது. ஏற்கெனவே இரு கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்ட ஓர் ஏற்பாடு இப்படிக் குலைந்து போவதேன்? சர்வதேச மனித உரிமை

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசியல்வாதிகளின் நோக்கம் பதவியை தேடுவதுமட்டுமல்ல"

## டாக்டர் ராதாகிருஷ்ணன் அறிவுரை

### பார்லிமெண்ட்பிரதிநிதிகள் அளித்தபிரிவுபசாரவைபவம்

புதுடில்லி, மே 8

**பதவியிலிருந்து ஓய்வு பெறும் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு நேற்று மாலை இந்திய பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் ஒரு பிரிவுபசார விழா நடாத்தினர்கள். இவ்விழா, பார்லிமெண்ட் மத்திய மண்டபத்தில் நடைபெற்றது.**

இந்திய உப ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசேன், டாக்டர் ராதாகிருஷ்ணனை, வரவேற்றுப்பேசினர். அதன் பின்னர், பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் சார்பில் லோகசபைச் சபாநாயகர் திரு. சஞ்சீவ் ரெட்டி பிரிவுபசாரப் பத்திரத்தை வாசித்தார். அவர் கூறியதாவது:

"கடந்த ஐந்து வருடங்களாகத் தாங்கள் தங்கள் உயர் பதவியை வகித்து வந்த முறையை நாங்கள் கண்டு மிகுந்த மகிழ்ச்சியும், திருப்தியும் அடைந்து வந்துள்ளோம். தாங்கள் தங்களுக்கே உரித்தான சிறந்த முறையில் அதனை நிர்வகித்து வந்துள்ளீர்கள் என்பது அங்கத்தவர்களாகிய எங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

**எதிர்பார்ப்போம்**

இத்துடன் உங்கள் வேலை முடிவடைந்து விடவில்லை. வருங்காலத்திலும், நாங்கள் தங்களின் மேலான ஆலோசனையையும் புத்திமதியையும் எதிர்பார்த்தே நிற்போம்.

தலைசிறந்த தத்துவ ஞானியாகிய தாங்கள், தாங்கள் வகித்து வந்த உயர்பதவிக்கு தங்களுடைய அரும்பெரும் குணங்களை எல்லாம் அர்ப்பணித்துள்ளீர்கள் தங்களின் அப்பழுக்கற்ற ஆத்மீக வாழ்வின் மூலம், இந்நாட்டின் வாழ்க்கை நெறியைச் சீர்ப்படுத்த முயற்சித்துள்ளீர்கள்.

எமது நாட்டில் நிலவும் சமூகக் கொடுமைகளை நீக்குவதற்குத் தாங்கள் என்றும் பின்னிற்கவில்லை. தாங்கள் இவற்றுக்கெதிராக இடைவிடாது போராடி வந்துள்ளீர்கள். இதன் பயனாகப்பல சமூகத் தீமைகளைக் களைய முடிந்தது. என்றாலும், இந்நாட்டில் இவை இன்னும் இருக்கவே செய்கின்றன. அவற்றை நீக்குவதில், தங்கள் முயற்சியை முன்மாதிரியாகக்கொண்டு நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

**உலகும் போற்றும் தத்துவஞானி**

இந்தியாவின் இன்றைய தலைசிறந்த தத்துவஞானி என அகில உலகமும் தங்களைப் போற்றுவது, எமக்குப் பெருமிதம் அளிக்கிறது. உலகின் தலைவர்களில் தங்களின் அரிய சொற்பொழிவுகளைக்கேட்டு ஆயிரக்கணக்கானோர் மெய்மறந்திருக்கிறார்கள்.

கிழக்குக் கலாச்சாரத்தை மேற்குக்கும், மேற்கினதைக் கிழக்குக்கும் உரிமையுடன் எடுத்துரைக்க வல்லவர் தாங்களே. தங்களின் வல்லமையால் உலகின் கண்களில் இந்தியாவின் பெயரும், புகழும்பெருமதிப்புப் பெற்றுள்ளன,

தாங்கள் பதவியிலிருந்த காலத்தில், உலக சமாதானத்துக்கும், சர்வதேச சகோதரத்துவத்துக்கும் விடுத்த அறைகூவலை உலகம் மதிப்புடன் செவிசாய்த்தது.

1962ம் ஆண்டில் தாங்கள் இந்தியாவின் ராஷ்டிரபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டீர்கள். 1964-ம் ஆண்டில் தாங்கள் இந்தியக் குடியரசின் உயர் பட்டமான 'பாரத ரத்தினம்' அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டீர்கள். தாங்கள் வகித்த பதவிகளுக்கெல்லாம் எளிமை, தயாளம், விவேகம், கம்பீரம் அரசியல் ஞானம் ஆகிய சிறந்தகுணங்களைத் தாங்கள் கொண்டு வந்தீர்கள்.

**செயல் வீரர்**

தாங்கள் ஒரு தத்துவ ஞானியாக மட்டும் இருக்கவில்லை. நடைமுறையிலும் ஒரு செயல்வீரனாகக்கடமையாற்றவும் தவறவில்லை.

தங்களுக்கு நீண்ட ஆயுளும், தேகசுகமும் ஆண்டவன் அளித்து, நாட்டுக்கு மேலும் சேவைசெய்ய வழி வகுக்கவேண்டுமென நாங்கள் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

திரு. சஞ்சீவரெட்டி பிரிவுபசாரப்பத்திரம் வாசித்து முடிந்ததும், அங்கத்தவர்களின் கரகோஷம் மண்டபத்தின் நாலாபக்கமும் நீண்டநேரம் ஒலித்தது.

இதன்பின்னர், அங்கத்தவர்கள் அனைவரும் கையெழுத்திட்ட பத்திரமொன்று டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் அன்பளிப்புச்செய்யப்பட்டது.

[5-ம் பக்கம் பார்க்க]

'வருடமொன்றுக்கு

## 20 ஆயிரம் கோடி டாலர் போருக்காக செலவிடப்படுகிறது'

### திருமதி விஜயலக்ஷ்மி கவலை

மணிலா, மே 8

'பயனற்ற போர்களில் வீணான சேதம் ஏற்பட்டு வருகின்றது. இதனைத் தவிர்த்துக்கொள்வதற்கு எல்லோரும் உழைப்பது அவசியம். போருக்காக செலவிடப்படும் பணத்தை மனித குலத்தின் வாழ்வுக்காக செலவிடலாம்' என பிலிப்பைன்ஸ் பல்கலைக் கழகத்தில் உரை நிகழ்த்திய திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் எடுத்துக் கூறினர்.

வருடமொன்றுக்கு சுமார் 20 ஆயிரம் கோடி டாலர் போருக்காக செலவிடப்படுகிறதென்றும் மனித சமூகத்தின் பசிப்பிணியைப் போக்கவும் மற்றப் பிரச்னைகளைத் தீர்க்கவும் இது பயன்படுத்தப்படலாமென்றும் திருமதி பண்டின் மேலும் தெரிவித்தார்.

## ரூபாவுக்குஒருபடி அரிசியால் ஏற்படும் பிரச்னை தீர்க்கவழி

### அண்ணதுரை விளக்கம்

சென்னை, மே 8

தமிழ்நாடு அரசாங்கம்மத்திய அரசாங்கத்திடமிருந்து கடனாகப் பெற்றுக்கொண்ட 20 கோடி ரூபாய்க்கான வட்டியை இரண்டு மூன்று வருடங்களுக்குசெலுத்தமுடியாமல் இருப்பதால் நிறுத்தி வைக்கும்படியும் பின்னர் கட்டுவதாகவும் கேட்கப்போவதாக தமிழக முதலமைச்சர் திரு. ஸி. என். அண்ணதுரை கூறினர்.

சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அவர் பேசுகையிலேயே இந்தத்தகவலை வெளியிட்டார்.

ரூபாய்க்கு ஒருபடி அரிசி கொடுப்பதனால் ஏற்படும் பணச்சிக்கலைத் தீர்ப்பதற்காகவே இப்படியான முடிவொன்றைத் தாம் மேற்கொண்டிருப்பதாகச் சொன்னர். 'வட்டியைக் கட்டமாட்டோம் என்று நாம் சொல்லவில்லை. அவகாசம்தான் கேட்கிறோம்'' என்றார் அவர்.

''பிரதமர் ஸ்ரீமதி இந்திராவை நான் சந்தித்துப் பேசினேன். அவரது சகல ஒத்துழைப்பும் நமக்குக் கிடைக்கும்; கிடைக்க வேண்டும். ரூபாய்க்கு ஒருபடி அரிசி கொடுப்பதால் ஏற்படும் மற்றைய பொருளாதாரச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நிர்வாகச் செலவுகளை கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளோம்'' என்றும் திரு. அண்ணதுரை கூறினர்.

## படகுவிபத்தில் 200 பேர் மாண்டனர்

### சீனவில் சம்பவம்

பீகிங், மே 8

சீனவில் யங்ஷி எனும் ஆற்றில் சென்று கொண்டிருந்த படகு விபத்துக்குள்ளானதால் இதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த 200 பிரயாணிகள் நீரில் மூழ்கி மாண்டனர்.

இவர்கள் சீனகம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் மா-சே-துங்கின் ஆதரவாளர்கள் என்றும் ஆற்றின் மற்றக்கரையில் தமது பிரசாரத்தைத் தொடர்ந்து செய்வதற்கு சென்றுகொண்டிருந்த பொழுதே இவ்வித விபத்து நேர்ந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில்

## பார்வையாளர் நெருக்கடியைக் குறைக்க பூர்வாங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பார்வையாளர்கள் நேரத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதில் புதுமையான முறை ஒன்றை ஆஸ்பத்திரிசபை கையாள முன் வந்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி 6-ம் வார்ட்டில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி சம்பந்தமாக ஆஸ்பத்திரி சபையினரிடம் செய்யப்பட்ட புகாரைத்தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி 6-ம் வார்ட்டான பெண்கள் சிகிச்சை நிலையத்தில் பார்வையாளர்கள் நேரமான நண்பகலிலும், மாலையிலும் அதிகமான பார்வையாளர்கள் அங்கு முற்றுகை யிடுகிறார்களாம். சிறிய கட்டமும், காற்றோட்ட வசதியுமற்ற இந்த வார்ட்டில் அதிகமான பார்வையாளர்கள் ஒரே வேளையில் நிற்பதால் அங்குள்ள நோயளர்கள் மிகவும் கஷ்டமடைவதோடு, டாக்டர்களும், தாதிகளும் கூட நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்படுகின்றதாம்.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சபைத் தலைவர் திரு. எம். வைரமுத்து தலைமையில் நடைபெற்ற ஆஸ்பத்திரி சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்ட பின்னர் 6-ம் வார்ட் நோயாளர்களைப் பார்ப்பதற்கு ஒவ்வொரு நோயாளருக்கும் இரண்டு அனுமதிச் சீட்டு வழங்குவதெனவும். இந்த முறையை ஒருமாதத்துக்குப் பரீட்சித்துப் பார்த்த பின்னரே முடிவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப்பார்வையாளர் அனுமதிச்சீட்டுக்கள் ஆஸ்பத்திரிக்காரியதரிசியால் நோயாளரின் நெருங்கிய உறவினருக்கு வழங்கப்படும். இந்த அனுமதிச் சீட்டைக் கொண்டு இந்த வார்ட்டில் ஒரு வேளையில் ஒரு நோயாளரைப்பார்க்க இரண்டு பார்வையாளரே அனுமதிக்கப்படுவார்கள்.

[ந நி.]

## ராஜாஜி குணமாகிறார்

சென்னை, மே. 8

சுதந்திராக்கட்சித்தலைவர் ராஜாஜி இப்போது குணமடைந்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பூரண ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி டாக்டர்கள் அவருக்கு யோசனை கூறியுள்ளார்கள்.

ராஜாஜியின் உடல் நலம் குறித்து பிரதமர் திருமதி இந்திரா எழுதியிருந்த கடிதத்துக்கு ராஜாஜி சார்பில் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதப்பட்டது.

பீகிங், மே 8

சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாசேதுங் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட இப்போது நல்ல உடல் நலத்துடன் இருப்பதாகவும் உறுதியாக இருப்பதாகவும் சீனவில் உள்ள வெளிநாட்டுத் தூதர்கள் கூறியுள்ளார்கள்.

மாசே துங்கிற்கு இப்போது வயது 73 ஆகிறது.

# வியட்னம் போரை நிறுத்த பிரிட்டன்-ரஷ்யா கூட்டுமுயற்சி

## பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி விரைவில் ரஷ்யா செல்வார்

லண்டன், மே 8

**வியட்னம் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் பிரிட்டனும் ரஷ்யாவும சேர்ந்து ஒத்துழைக்கவிருக்கின்றன. இதற்கான ஆரமப ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன.**

ரஷ்யத் தலைவர்களுடன் இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிறவுண் விரைவில் ரஷ்யா செல்லவிருக்கிறார்.

**யுதாண்டின் விஜயம்**

இம்மாதம் 19-ம் திகதி பிரிட்டனுக்கு விஜயம் செய்யவிருக்கும் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டுடன் [illegible] பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே 22-ம் திகதி பௌத்த ஜயந்தியை முன்னிட்டு வியட்னமில் அனுஷ்டிக்கப்படவிருக்கும் 24 மணி நேரம் போர் ஓய்வை இரு நாட்களுக்கு நீடிப்பதற்கு பிரிட்டன் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தொடர்பு கொண்டுமுயற்சி மேற்கொண்டுள்ளது

**ரஸல் முயற்சி**

வியட்னமில் அமெரிக்கா யுத்தக் குற்றம் புரிந்ததாகச் சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் சம்பந்தமாக பிரிட்டிஷ் தத்துவஞானி பேர்ட்ராண்ட்ரஸலால்மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணை சுவீடனின் தலைநகரமான ஸ்டாக்ஹோமில் இப்போது நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் வியட்னமில் ஆக்கிரமிப்பு நடவடிக்கை மேற்கொண்டதாகவும் இதில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைமோசடி வழக்கில் எதிரிக்கு 48 மாத கடூழியம்

வவனியா, திங்கள்

வவனியா நீதிமன்றத்தில் சுமார் இரண்டு வருடங்களாக நடைபெற்ற கூட்டுறவுச் சங்கநம்பிக்கை மோசடி வழக்கொன்றில் எதிரிக்கு 48 மாதம் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் வவனியா மாவட்டத்தைச் சேர்ந்த தண்ணியூற்றுப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் காரியதரிசியாகக் கடமையாற்றும் தலைமையாசிரியர் நேசரத்தினம் என்பவர் தண்ணியூற்றுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய பணத்தை நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வவனியா கூட்டுறவுப் பகுதியினர் இவ் வழக்கை தொடர்ந்திருந்தனர்,

சங்கத்துக்குரிய 6,800 ரூபாவை நம்பிக்கைமோசடி செய்ததாக இவர் மீது மூன்று குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. வவனியா நீதிமன்றத்தில் அனுராதபுரம் மாவட்ட மேலதிநீதிபதி திரு.கே. ஏ.பி ரணசிங்கா முன்னிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்,

''உம்மைப் போன்றவர்களினுல் கூட்டுறவு இயக்கம் சரிவர முன்னேற முடியாதிருக்கிறது.இப்படியான குற்றங்களைக் கண்டு பிடிப்பது மிகவும் கஷ்டம்.இது மாதிரியான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட எதிரிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.இந்த வழக்கில் உமக்குக் கிடைக்கும் தண்டனை காரணமாக வேலையிழந்து உமது குடும்பத்துக்கு கஷ்டம் ஏற்பட்ட போதிலும் இதை குறித்து நான் கருணை காட்ட முடியவில்லை என நீதிபதிதமது தீர்ப்பின் போது எதிரியைப் பார்த்துக் கூறினுர்

விசாரணை முடிவில் எதிரிக்கு நீதிபதி முதல் குற்றச் சாட்டுக்கு இரண்டு வருட கடூழியச்சிறைத் தண்டனையும்,2-வது குற்றச் சாட்டுக்கு பதினெட்டு மாத கடூழியச்சிறையும்,3-வது குற்றச் சாட்டுக்கு ஆறு மாத கடூழியச் சிறையும் வழங்கி தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

தீர்ப்பை எதிர்த்து எதிரி அப்பீல் செய்துள்ளார்.

## பரந்தனில் தேசிய விழா

பரந்தன், திங்கள்

''கடந்த 300 வருடங்களாக நாம் அந்நியர் ஆட்சியில் இருந்தோம். நாடுவிடுதலையடைந்து இன்று எமது தேசிய அரசாங்கம் தேசிய அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாகச் செயல்புரிந்து வருகிறது. நமது அரசாங்கம் முக்கியமாக கிருஷிகப் பகுதி, கிராமமுன்னேற்றத் துறையில் மிகுந்த கவனம் செலுத்துவதன் நோக்கம் தேசிய அபிவிருத்தியை வளர்ப்பதற்காகவே'' என்று கரைச்சிப்பகுதி தேசிய விழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்து உரையாற்றிய வடமாகாண கிராம முன்னேற்றச்சங்கங்களின் பிரதம பயிற்சி ஆசிரியர் திரு. ரி. இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

விவசாயிகள் தாம் உழைக்கும் காலத்தில் கட்டாயமாகக் காப்புறுதி ஸ்தாபனத்தில் சேர்ந்து இயன்ற பணத்தைக் காப்புறுதி செய்ய வேண்டுமென்றும் உழைக்க முடியாத வயோதிபகாலத்தில் அது விவசாயிகளுக்குப் பெரிய உதவியாகவிருக்குமென்றும் கரைச்சிப்பகுதி பயிர்ச்செய்கைக்குழு சமாஜத்தலைவர் திரு. அன்டன் சி. பொன்னம்பலம் கூறினுர்.

## உற்பத்தியைப் பெருக்கவேண்டும்

பரந்தன், திங்கள்

''இன்றைய எங்கள் பொருளாதார நிலை மிகவும் பின்தங்கியிருக்கிறது, காரணம் உணவுப் பொருள்களுக்காகவே பெரும் தொகையான ரூபா வெளி நாடுகளுக்குச் செல்கிறது. எமது நாடு விவசாயநாடாகும். எனவே நாம் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.''

இவ்வாறு கரைச்சிப்பகுதியில் நடைபெற்ற இரண்டாவது நாள் தேசிய மகாநாட்டுக்குத் தலைமைதாங்கிய கரைச்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. ஆர். யோகநாதன் பேசும்போது குறிப்பிட்டார்.

இம்மகாநாட்டில் கிராம அபிவிருத்தி மேற்பார்வையாளர் கிராம அபிவிருத்தி இயக்கம் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினுர்.

மற்றும் பலரும் பேசினர்.

## நெடுந்தீவில்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு மத்தி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை கொண்டாடப் பட்டது. நண்பகல் விசேட அபிஷேகமும், மகேசுவர பூசையும் நடைபெற்றன. மாலை நிகழ்ச்சிகள் பிரம்மஸ்ரீ நா. தியாகராஜக் குருக்கள் தலைமையில் நடைபெற்றன. மகாவித்தியாலய அதிபர் திரு. நா. குருநாதி, திரு. க தர்மலிங்கம், பண்டிதர் தி. கணபதிப்பிள்ளை, திரு. ச. இரத்தினசபாபதி, திரு. ச. விநாயகமூர்த்தி ஆகியோர் உரை நிகழ்த்தினர். மகாவித்தியாலய மாணவிகளின் பாட்டும், திலகவதியார் என்னும் நாடகமும் இடம்பெற்றன.

## குடிதண்ணீர்ப் பஞ்சம்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு கிழக்கின் ஒரு பகுதி மக்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டால் பெரும் கஷ்டத்துக் குள்ளாகியுள்ளனர். குடிதண்ணீருக்காக அவர்கள் மூன்று மைல்களுக்குமேல் நடந்து சென்று குழாய்மூலம் விநியோகம் செய்யப்படும் தண்ணீரைப் பெற வேண்டியுள்ளது. வரட்சியான இக்காலங்களில் வருடாவருடம் அரசாங்கம் குடிதண்ணீர் இப்பகுதி மக்களுக்கு லோறி மூலம் விநியோகம் செய்து வந்தது. ஆனுல் இம்முறை இதுவரை இத்திட்டம் ஆரம்பிக்காமல் இருப்பதால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

## மாணவர் கஷ்டம்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பஸ் சேவையின் நேரசூசி பொருத்தமற்ற முறையில் அமைந்துள்ளதால் பஸ் வண்டியில் செல்லும் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நெடுந்தீவு மகா வித்தியாலயம் மாலை 3-45 க்கு முடிவடைவதால் மாலை 4-30 மணிக்குத் துறைமுகத்திலிருந்துவரும் பஸ்வண்டியைக் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. அத்துடன் மாலை 4-30க்கு நெடுந்தீவுக்கு வந்துசேரும் மோட்டார்வள்ளம் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வருவதால் சிலசமயங்களில் 5 மணிக்குக்கூட மகாவித்தியாலயத்தை வந்தடைவதில்லை. பிரயாணிகள் அதிகம் வந்துவிட்டால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடம் கிடைக்காமல் போய்விடுகின்றது.

## ஒன்றும் அகப்படவில்லை

இமையாணன், திங்கள்

நேற்முறுன்தினம் தொண்டமனுற்றில்உள்ள ஒருவீட்டில் பருத்தித்துறைப் பொலிசார்,கள்ளக் கடத்தல் பொருட்கள் இருப்பதாகச் சந்தேகத்தின் பேரில் திடீர் சோதனையிட்டனர்.இந்தியாவின் கள்ளச் சாமான்கள் அவருடைய வீட்டில் இருப்பதாகப் பொலிசார்சந்தேகித்ததைத் தொடர்ந்தே இப் பரிசோதனை நடைபெற்றதாம்.அவ் வீட்டில் அவர்கள் எதிர் பார்த்த கள்ளப் பொருட்கள் எதுவும்இல்லாததினுல் பொலிசார் உடனே திரும்பிச் சென்றனர்.

## ஆண்டுவிழா

சுழிபுரம், திங்கள்

வட்டுக்கோட்டைக் கலைக் கழகம் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி ஒரு கலைப்போட்டியை நடாத்த முடிவு செய்துள்ளது. இப் போட்டியில் வட்டுக் கோட்டைத் தேர்தல்தொகுதியிலுள்ள பாடசாலைகள், சனசமூக நிலையங்கள்,மாதர் இளைஞர் சங்கங்கள்போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு கொள்ளலாம். போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் கழக இயக்குனர் திரு. க. கைலாயநாதன் கவனித்து வருகின்ருர்.

## ஒலிபரப்ப கோரிக்கை

சங்கானை, திங்கள்

சங்கானையில் மேமாதம் 22,23,24ந்திகதிகளில்நடைபெறவிருக்கும் திருக்குறள் மகாநாட்டில் ஈழத்தின் தலைசிறந்த அறிஞர்களும் கவிஞர்களும் கலைஞர்களும் பங்குபற்ற இருக்கின்றனர். மகாநாட்டிற்கு நேரில் வரமுடியாதவர்களும் இந்நிகழ்ச்சிகளைக்கேட்பதற்கு வசதிஅளிக்கும்முகமாக இலங்கை வானெலி இந்நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப வேண்டுமென மகாநாட்டுச் செயலாளர் திரு.மு.சிவானந்தம் இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனத்தலைவரைக் கேட்டுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, திங்கள்

தொண்டமானுறு இந்து ஆங்கில பாடசாலையில் பெற்ருர்- சிஆரியர் சங்கப் பொதுக்கூட்டம் திரு. வி. தம்பிப்பிள்ளை தலைமையில் நடை பெற்றது.

நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.போஷகர்:- திரு. வீ. இராசசேகரம், உபபோஷகர்:-திரு. எம். சீவரெத்தினம், தலைவர்:-திரு.வி.தம்பிப்பிள்ளை, உபதலைவர்கள்:-திருவாளர்கள்எம்.அருந்தவராஜா எஸ் நற்குணம், காரியதரிசி: திரு.கே.சீனிவாசகம், தனுதிகாரி:-திரு.எஸ்.அழகுதுரை நிர்வாகசபை அங்கத்தவர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள்:- ஜே இராசநாயகம், ஏ. விசாகரத்தினம், ஏ.தில்லையம்பலம், எஸ். தம்பு,ஈ. சிறீதரன், ஏ. சரவணப்பெருமாள், எஸ். சுப்பிரமணியஐயர், என். சிங்காரம், ரி. அமிர்தலிங்கம், திருமதிஎஸ். சக்திவேல்.

சினிமாவிமர்சனம்

## குமரிப் பெண்

ஹாலிவுட் பிச்சை வாங்க வேண்டும், இந்த குமரிப்பெண்ணிடம்! அங்கம் தெரிய ஆடை உடுத்தி, உடலை வளைத்து, நெளித்து, சுழித்து, பல கோணங்களிலும் அசைத்து ஆடும் ஒய்யாரப் பாவை ஒருத்தியின் கவர்ச்சியை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம் தான் ' குமரிப் பெண் ' என்று சொல்லவேண்டும்.

குமரிப்பெண் தன் தாத்தாவைக் காப்பாற்றுவதற்காக சொன்ன ஒரு பொய் இளைஞன் ஒருவனின் தாயையே பலியெடுத்து அவனைப் படாத சோதனைக்குள்ளாக்குகிறது. தாத்தாவின் உறவினர்கள் குமரிப் பெண்ணையும், தாத்தாவின் சொத்துக்களையும் கொள்ளையடித்துவிட திட்டம்போடுகிருர்கள். கடைசியில் நாயகனுக்கும், நாயகிக்கும் திருமணத்தை செய்து வைத்துவிட்டு படத்தை சுபமாக முடித்துவிடுகிருர்கள்.

இளம் சிட்டு ஜெயலலிதா குமரிப்பெண்ணு கவருகிருர். 'கவர்ச்சிக் குமரி' என்ற பட்டத்தையேஅவருக்கு வழங்கிவிடலாம்! ஜெயலலிதா ரஸிகர்களை சொக்க வைத்துவிடுகிருர்.

பட்டிக்காட்டானுன ரவிச்சந்தர் திடீரென்று சூட்டும் கோட்டும் போட்ட மைனராக தோன்றுவது நம்பமுடியாதிருந்தாலும், தனது துடிப்பான நடிப்பால்சபாஷ் வாங்கி விடுகிருர். காதல் காட்சிகளில் மட்டுமென்ன ஸ்டண்ட் கட்டங்களிலுமே அபாரமாக நடித்திருக்கிருர். தமிழ் சினிமா உலகில் அவரை'சின்னஎம்.ஜி. ஆர்'. என்றே சொல்லலாமே!

ரங்கராவ் நடிப்பொன்றுக்காகவே நம்பிப்போகலாமென்ற உண்மை இந்தப்படத்தில் சிறிது பொய்த்துவிட்டது.

வக்கீலாக [?] வரும் நாகேஷ் தன் நகைச்சுவைகளையெல்லாம் விளாசு விளாசு என்று விளாசித் தள்ளுகிருர். படத்தைச்சுபமாக முடிக்கும் பெருமையும் அவரையே சாருகிறது.

டைரக்டர் ராமண்ணு கவர்ச்சியை மட்டும் நம்பி படமெடுக்க முயன்றிருக்கிருர். ஓரளவு வெற்றியும் கண்டு விட்டார் என்றே சொல்லலாம்!

ரயிலுக்குள் பட்டிக்காட்டானைப் 'பகடி' செய்து ஜெயலலிதா கும்பல் ஆட்டம்போட்டு கும் மாளமடித்துப்பாடும் ''ஐயையையா ....உருவத்தைப்பாரு.....'' பாட்டு; பாட்டில் அர்த்தமெதுவுமில்லா விட்டாலும் பிறகும், பிறகும் வாயை அசைக்கச் செய்கிறதே! மொத்தத்தில்-- 'குமரிப்பெண்' பார்ப்போரைகவர்த்து விடுகிருள்.

இப்படம் யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது.

—பாமா

## இ. போ. ச. பற்றி பிரேரணை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திலும் மற்றய பகுதிகளிலும் கடந்தசில வாரங்களாக பஸ் சேவைமிகவும்மோசமடைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள சிலசேவைகள் குறிக்கப்பட்ட நேரங்களில் சேவை செய்யாததால் பிரயாணிகள் பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் கஷ்டமடைகின்றனர்.

பூநகரிப்பகுதியில் பஸ் சேவை மிகவும் மோசமடைந்துள்ளதென்றும் ஆகையால் தற்போதைய இ.போ. ச. பிரிவுகளை பரவலாக்க வேண்டுமென்று கோரும் பிரேரணையொன்றையும் கிளிநொச்சிபா. உ. திரு, கா. பொ. இரத்தினம்அரசாங்க பாராளுமன்றகுழுவில் விவாதிப்பதற்காக முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

## சிங்கள கடிதம்

### எம். பி. புகார்

கிளிநொச்சி, திங்கள்

மருத்துவ தாதி பரீட்சை சம்பந்தமாக சுகாதாரப் பகுதியினரால் செங்கலடியிலுள்ள செல்வி இ. தேவசக்தி என்பவருக்கு சிங்களத்தில் கடிதம் அனுப்பப்பட்டது. கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் இது சம்பந்தமாகசுகாதாரப் பகுதி செயலாளர் திரு. கு. பாலசிங்கத்துடன்தொடர்புகொண்டுசிங்களமே முற்றுக தெரியாதவர்களுக்கு எவ்வாறு சிங்களத்தில் கடிதம் அனுப்பப்பட்டதென்றும் இப்படிக் கடிதங்கள் அனுப்பியவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் கேட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதாக திரு. பாலசிங்கம் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## வேலணை கி. ச. கோரிக்கை

நாரந்தனை, திங்கள்

'வேலணை கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இருந்து 1967-ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் நாலு ஆசிரியர்கள் மாற்றப்பட்டுள்ளார்கள். இந்த ஆசிரியர்களின் இடத்துக்கு இதுவரை எந்த ஆசிரியரும் அனுப்பப்படவில்லை. இதனுல் மாணவரின் கல்வித்தரம் குன்றிவருகிறது.

இதற்கு உடனடியான நடவடிக்கை எடுத்து, ஆசிரியர்களை நியமிக்கும்படி தீவுப்பகுதி எம். பி., கல்வி மந்திரி, வித்தியாதிபதி ஆகியோரைக் கேட்டுக்கொள்வதென்ற தீர்மானமும் வேலணை கிராமசபையால் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

குறிப்பு: எல். ஏ/ 1239

1966-ம் ஆண்டின் 28-ம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் [அத்தியாயம் 460].

7-ம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1967-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்கம் வர்த்தமானப் பத்திரிகையில் இலக்கம்: 14,747 பகுதி III இல் பார்க்கவும்.

அட்டவணை

காரியாதிகாரியின் பிரிவு:- பச்சிலைப்பள்ளி.
கிராமத்தின் பெயர்:- முகாவில்.
காணியின் பெயர்:- முகாவில் தோட்டம் அல்லது சுளுவில்குள வளவு அல்லது சாந்தி குமரேசுபற்று.
ஆரம்ப பட இல:- 99 இல்
துண்டு இல:- துண்டு இல. 1.

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

2880



### அறிவித்தல்

வடக்கம்பரையிலிருந்த அமரக்கிரிகை, பூர்வக்கிரிகை செய்யும் வேதாரணியக் குருக்கள் தற்பொழுது பண்ணாகம் விசவர்த்தனையில் இருக்கிருர். 1098



ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா நடித்த
பெண்ணே நீ வாழ்க!

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—விஜயகுமாரி நடித்த
'பச்சை விளக்கு'

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
WOMAN WITHOUT A FACE
(Adults)
9-35p.m.
ஒக்கம சமானய
[சிச்களம்]


## இருவர்கைது

யாழ்ப்பாணம். செவ். மானிப்பாயில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற களவு ஒன்று சம்பந்தமாக அதே இடத்தைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்,

மானிப்பாயைச் சேர்ந்த பூபாலராஜா என்பவரது வீட்டில் 150 ரூபா பணமும், 200 ரூபா பெறுமதியான நகையும் களவுபோனதாகப் பொலிஸில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து ஆனைக்கோட்டைப்பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு நாவுக்கரசுவினுல் பூபாலராஜாவின் வீட்டு வேலைக்காரனுன பொன்னையா இராசுவும், அவரது மைத்துனரான மகாலிங்கம் என்பவரும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

களவுபோனதாகச் சொல்லப்படும் பொருட்களும், பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இருவரையும் இம்மாதம் 10-ந் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. எம். ஜமீல் உத்தரவிட்டார். [ந.நி.]


கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனேகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணு


யாழ். உதைபந்தாட்ட சங்கசுற்றுப் போட்டி

## குருநகர், சென். மேரீஸ் வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவிலான 'நொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகியுள்ளன.

இச்சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டி குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் மயிலிட்டி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்றது. இப்போட்டியில் குருநகர் கோஷ்டி மயிலிட்டிக் கோஷ்டியை அமோக வெற்றியீட்டியது. எனினும் மயிலிட்டிக் கோஷ்டியினரின் ஆட்டம் அருமையாகவிருந்தது. இப்படியான யாழ். சுற்றுப் போட்டிகளில் மயிலிட்டிக் கோஷ்டி கலந்துகொண்டது இதுவே முதல் தடவையாகும். அவர்களின் இந்த முதலாவது போட்டியிலேயே யாழ். ரசிகரின் அபிமானத்தைப் பெற்ற இவர்களின் எதிர்காலம் ஒளிமயமாகும் என்பது இவர்களின் முன்னணி வீரர்களின் விளையாட்டுத் திறனில் இருந்து தெரிகிறது. குருநகர்க் கோஷ்டி அனுபம் பெற்ற வீரர்களைக் கொண்டது. எனவே விளையாட்டரங்கிற்குப் புதிய மயிலிட்டியை வெற்றியீட்டியதில் அதிக ஆச்சரியமில்லை. குருநகர் அடுக்கடுக்காக கோல்களை அடுக்கியபோதிலும் மயிலிட்டியினர் விட்டுக்கொடுக்காமல் இயன்றவரை மோதினர். இவர்களின் அநேகமான கோல்கள் போடும் முயற்சிகளை குருநகர் பின்னணி வீரர்கள் சாதுரியமாக முறியடித்துக் கொண்டேயிருந்தனர். இப்போட்டி முடிவில் குருநகர் 9-0 கோல்களால் மயிலிட்டியை வென்றனர்.

### சென். மேரிஸ் வெற்றி

நாவாந்துறை சென். மேரிஸ் கோஷ்டிக்கும் தெல்லிப்பழை ஒலிம்பிக்ஸ் கோஷ்டிக்கும் நடைபெற்ற பெரும் மோதலில் நாவாந்துறைக் கோஷ்டி தெல்லிப்பழைக் கோஷ்டியை கடுமையான பலப்பரீட்சையின் பின் வெற்றி கொண்டனர். இடைவேளைக்கு முன்னர் நடந்த போட்டியில் தெல்லிப்பழை ஒன்றும் அடிக்காத வகையில் நாவாந்துறை ஒரு கோலை வலது முன்னணி வீரர் அன்ரன் மூலம் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் இரு சாராரும் ஆளுக்கு ஒரு கோலை விளாசினர். தெல்லிப்பழைக்கு முன்னணி வீரர் ஆனந்தகுமாரசாமியும், நாவாந்துறைக்கு அன்ரனும் இக்கோல்களை சாதுரியமாகப்பெற்றனர். ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் இருகோஷ்டியினரும் நன்ருகவே ஆடினர். நாவாந்துறை கோல்காப்பு வீரர் அமிர்தநாதரும் தெல்லிப்பளை கோல்காப்பு வீரரும் குறிப்பிடத்தக்க முறையில் நன்ருக ஆடினர். இப்போட்டி முடிவில் நாவாந்துறை சென். மேரிஸ் கோஷ்டியினர் 2—1 கோல்களால் தெல்லிப்பளை ஒலிம்பிக்ஸ் கோஷ்டியை வெற்றியீட்டினர். இப்போட்டிக்கு திரு. தேவபாலன் மத்தியஸ்தம் வகித்தார்.

## இந்துவாலிபர் வெற்றி

கோண்டாவில், திங்கள் கோண்டாவில் இந்துவாலிப சங்கத்தின் 1-ம் பிரிவுக் கோஷ்டிக்கும் கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 1-ம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கோண்டாவில் இந்து வாலிப சங்கம் இனிங்ஸாலும் 42 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

இச் சங்கத்தின் 2-வது பிரிவுகோஷ்டிக்கும் கோண்டாவில் மேற்கு சுபாஸ் கிளப்பின் 2-வது பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இந்து வாலிப சங்கத்தின் 2-வது பிரிவுக் கோஷ்டி 15 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

## "அரசியல் . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரிவுபசாரத்துக்குப் பதிலளித்துப் பேசிய டாக்டர் ராதாகிருஷ்ணன், பின்வருமாறு கூறினுர்:

''தாங்கள் அனைவரும் அதிகமாகஎன்னைப் புகழ்ந்துவிட்டீர்கள். எனதுபதவிக் காலத்திலும் சரி, இந்த நேரத்திலும் சரி, அங்கத்தவர்களாகிய உங்களுடைய நம்பிக்கைக்கும், அன்புக்கும் நான் பாத்திரமாக இருந்து வந்துள்ளேன்.

எனக்கு அளிக்கப்படும் வரவேற்புக்களிலெல்லாம், பிளேட்டோ [கிரேக்க தத்துவ ஞானி] குறிப்பிடப்படாமலிருப்பதில்லை.

ஆனுல் தத்துவஞானி என்ருல் தத்துவத்துடன் நின்றுவிடவேண்டுமென்பதில்லை. சிந்தனையாளர் செயல்வீரர்களாகவும் திகழவேண்டும். தத்துவார்த்த விவேகத்துடன், செயல்முறை விவேகமும் இணைந்திருக்கவேண்டும். உலகைப் பற்றிய சிறந்த கற்பனைகொண்டுள்ளவர்கள், அந்த உலகை மாற்றவும் முயலவேண்டும்.

### அரசியல்வாதி யார்?

அரசியல்வாதிகள், அரசியலை அதிகாரத்துக்கும், புகழுக்குமென மட்டும் கருதக்கூடாது. அரசியல்வாதிகள், மக்களின் அபிலாசைகளுடனும், துன்பங்களுடனும் தங்களை அடையாளப்படுத்திக்கொள்பவர்கள். அவர்கள் உணர்ச்சிவாய்ந்த மனிதர்கள். அவர்கள் அரசியல்துறையில் மட்டுமன்றி, இந்நாட்டின் பண்பாடு, கலாச்சார, மற்றும் கலைத்துறைபோன்ற பல அரிய துறைகளிலும் அக்கறை காட்டவேண்டும்.

விழா இறுதியில், இந்திய தேசியகீதம் வாசிக்கப்பட்டது.


MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
Vincent Price
in
MASQUE OF THE RED DEATH
(Colour)


## வரி விளம்பரம்


### தேவை

நெசவாளர்

நெசவு வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். வ. நவரத்தினம், கருணு நெசவுநிலையம் வீமன்காமம், தெல்லிப்பளை. 1968

### விற்பனைக்கு

வளவு

அராலி மேற்கு கொட்டைக்காடு ஆஸ்பத்திரிக்குத் தெற்கே துரட்டிப்பனை வளவு 5 பரப்பு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு அன்னப்பிள்ளை நாகலிங்கம், வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை. 1985

### வைத்தியம

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## தமிழிலும மொழி பெயர்ப்பு

கொழும்பு, திங்கள் மோட்டார் போக்குவரத்துஅதிகாரி காரியாலயத்தில் மோட்டார் பதிவுப் புத்தகங்கள் சிங்களத்தில் வழங்கப்படுவதை ஆட்சேபித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்ததைத்தொடர்ந்து தற்பொழுது தமிழிலும் பதிவுப் புத்தகங்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிய வருகிறது. சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமுள்ள படிவங்கள் தமிழிலும் தற்பொழுது மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாம்.


ராதா மணி மார்க்
சந்தனுநித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச்செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபால இடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

கிடைக்குமிடம்:
லிங்கம் ஸ்ரோர்ஸ்
சாவகச்சேரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குண்டு துளைத்ததால் தசைத் துண்டு வெளியேறிக் கிடந்தது"

## வல்வெட்டித்துறை சம்பவ விசாரணையில் டாக்டர் சாட்சியம்

வல்வெட்டித்துறை, திங்கள்

'காலஞ்சென்ற சிவஞான சுந்தரத்தின் உடலிலிருந்து 2x1 அங்குல அளவுள்ள தசைத்துண்டொன்றுகுண்டு பீறிட்டதால் வெளியேறிக் கிடந்தது. அது 3-வது காயத்துக்குச் சமாந்திரமாயிருந்தது' என்று வெளிப்புறக்காயம் ஒன்று பற்றியும் 'இடதுபக்க நெஞ்சு துளைக்கப்பட்டதனுல் வெளிப்புறக் காயத்துக்கு கீழ்ப்பக்கத்திலுள்ள 3வது விலாஎலும்பை குண்டு ஊடறுத்துச் சென்று உடைத்துவிட்டதென்றும், 4வதுவிலா எலும்பில் சிறுதுண்டுபறந்துவிட்டதென்றும், உடைந்த விலா எலும்புக் கூடாக சுவாசப்பை துளைக்கப்பட்டு வெளியில் தள்ளப்பட்டிருந்ததென்றும், சுவாசப்பை உறையில் 2பைந்து இரத்தம் இருந்ததாகவும், ஒன்றேகால் அங்குல துளை சுவாசப்பையில் காணப்பட்டதாகவும் உட்புறக்காயம் பற்றியும் விபரித்த யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் கூறினுர்.

சென்றமாதம் 8-ம் திகதி வல்வெட்டித்துறையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் மரணமான ஆர். சிவஞான சுந்தரத்தின் மரணம் பற்றி பருத்தித்துறை மாஜிஸ்திரேட் நடத்திவரும் விசாரணையில் நேற்று சாட்சியமளிக்கையிலே யே டாக்டர் மேற்கண்டவாறு கூறினுர். மேலும்பலகாயங்கள்பற்றி விபரித்த அவர் இருதயத்தின் அடிப்பாகத்தில் ஓர் அங்குல காயமிருந்ததாகவும், இரத்த நாடி பழுதுற்றிருந்ததாகவும் கூறினுர்.

த. பாலசுப்பிரமணியம் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது -

நான் வல்வெட்டித்துறையில் வசித்துவருகிறேன். சாரதியாக வேலை செய்கிறேன். சம்பவம் நடந்ததினத்தன்று மாலை 7மணியளவில் வீட்டிலிந்ப்து புறப்பட்டு வல்வெட்டித்துறைச் சந்தியிலுள்ள ரெயிலர்கடைக்குப்போனேன். அக்கடையில் எனக்குரிய வேலைமுடியாததால் அவ்விடத்தைவிட்டு பவுடர் வாங்குவதற்காக கலாநிதி ஸ்ரோருக்குப் போனேன். அங்குபவுடரை வாங்கிக்கொண்டுபோய் வீட்டில் கொடுத்துவிட்டு திரும்பவும் ரெயிலர் கடைக்குவந்தேன். அப்போது வாசிகசாலையிலிருந்து சனக்கூட்டமொன்று ஓடிவந்தது. அந்நேரத்தில் வாசிகசாலைப் பக்கத்தில் 'ஐயோ' என்ற சப்தம்கேட்டது. நான் நின்ற இடத்திலிருந்து சப்தம் கேட்ட திசையை எட்டிப் பார்த்தேன். அந்நேரத்தில் எனக்கு முகத்திலும் கழுத்திலும் துப்பாக்கிச் சூடு பட்டது. நான்உடனே மயங்கி கீழே விழுந்துவிட்டேன். பிறகு எனக்கு என்ன நடந்ததென்று தெரியாது.

எஸ். வல்லிபுரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் நெல்லியடியில்கடையொன்று வைத்திருக்கிறேன். அக்கடையில் காலம்சென்ற சிவஞான சுந்தரத்திடம் பீடி வாங்கிவியாபாரம்செய்வேன். காலம்சென்றவர் வான்மூலம்பீடிகளைக் கொண்டுவந்து தருவார். அன்று நான் பீடிகளை வாங்கிக்கொண்டு 42 ரூபாவுக்கு ஒருசெக்கும் பணமாக 386-75 சதமும் கொடுத்தேன். அவர்கள் அவ்விடத்தைவிட்டு இரவு8-15மணியளவில் புறப்பட்டுவிட்டார்கள். வான் ஓட்டிக்கொண்டுவந்தவரை அன்றுதான் முதன் முதலாகக்கண்டேன்.

கொழும்பு உதவி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். வேலும்மயிலும், சார்ஜண்ட் கே. இராசரத்தினம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

மேல்விசாரணை இம்மாதம் 14ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபன

### செவ்வாய் 9 - 5 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 பேச்சு, — சிறுத்தொண்டநாயனுர், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை, மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம், 5-45 செக்கோஸ்லவாக்கியதேசியதின நிகழ்ச்சி.

இரவு 6-15 குதூகலம், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 புல்லாங்குழல்இசை — அ. நமசிவாயம், 7-45 மேற்கத்திய அறிஞரின் தமிழ் நூல் பற்றி திரு. எப். எக்ஸ். ஸி. நடராஜா — பேச்சு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சிகள், 8-15 தேர்ந்த இசை, 8-30 கவிதை மஞ்சரி, 8-45 இஸ்லாமிய பாடல்கள், 9-30 நாதஸ்வரம் — எஸ். மாணிக்க சாமி, 10-15 தேர்ந்தஇசை.

---

குருக்கள் மரணம்

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

'காலஞ்சென்ற கணபதீஸ்வரக்குருக்களை நானேபிரேத பரிசோதனை செய்தேன். காலஞ்சென்றவரின் உடலில் 8 காயங்கள் இருந்தன. அதில் மூன்று முறிவு காயங்களாக இருந்தன, காலஞ்சென்றவர் குந்திக்கொண்டிருந்த போது காரால்மோதி மரணமடைந்திருக்கலாம்.'

மேற்கண்டவாறு காரைநகர் சிவன் கோவில் அர்ச்சகரான கணபதீஸ்வரக்குருக்கள் காரால் மோதப்பட்டு மரணமானது சம்பந்தமாக நடைபெற்ற வழக்கு விசாரணையில் டாக்டர் தெய்வேந்திரம் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில், மாஜிஸ்திரேட் முகமட் ஜமீல் முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கில் களனியாவைச் சேர்ந்த சிறிசேன என்ற சாரதியே காரால் மோதிகாலஞ்சென்றவருக்கு மரணம் விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டப் பட்டிருந்தது.

டாக்டரின் சாட்சியத்தை தொடர்ந்து மாஜிஸ்திரேட் வழக்கை ஜூன் மாதம் 5-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். [ந.நி.]

---


### காணவில்லை

மொறிஸ் என்று அழைக்கப்படும் எனது மகன் அல்பிரட்டை மூன்று தினங்களாகக் காணவில்லை. வயது 18. சுமார்ஐந்தரைஅடி உயரம். பொது நிறம், கன்ன உச்சி. நீலநிற அரைக்கால் சட்டையும் வெள்ளை சேர்ட்டும் அணிந்திருந்தார். இவரைக் காணுபவர்கள் தயவுசெய்து சமீபத்திய பொலிஸ் நிலையத்திக்கோ எனக்கோ அறிவிக்கவும். வி. பொன்னையா, 3, சந்தனமாதா ஒழுங்கை, பண்டியதாழ்வு, யாழ்ப்பாணம். 2394


---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மே மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## இன்று

இன்று மாலை 6-30 மணிக்கு நாவலர்மண்டபத்தில் தருமைஆதீனப்புலவர் திரு. க.வஜ்ரவேலு முதலியார் 'திருப்பாசுரம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

---

## வள்ளம்

யாழ்ப்பாணம், செவ்.

மண்டைதீவுக் கடலில்கண்டெடுக்கப்பட்ட மீன்பிடி வள்ளம் ஒன்று மீனவர்களால் மண்டைதீவு கிராம சேவையாளரிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

---

## பயிர் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிகள் வழக்கம்போல பயிர் நஷ்ட உத்தரவுக்கான பத்திரத்தை நிரப்பி பயிர் பாதுகாப்புச் சட்டத்தின்படி உருத்திரபுரம்காப்புறுதி முதல்வராக இருக்கும் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்திடம் சமர்ப்பித்த போது அவர்கள் இதற்கு உருத்திரபுரம் பயிர்ச்செய்கைப்பிரதிநிதிகளே இதற்கு பொறுப்பு எனக் கூறிவிட்டார்களாம். பயிர்ச்செய்கைக் குழுப்பிரதிநிகள் இவ் விண்ணப்பங்களைப் பெற்று கிளிநொச்சி கமத்தொழில் சேவை மாவட்ட உத்தியோகத்தரிடம் கொடுத்திருந்தார்களாம்.

ஆனுல் கமத்தொழில் சேவைத் திணைக்களம் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டத்தின் படி குறிக்கப்பட்ட காலஎல்லைக்குள் தங்களுக்கு விவசாயிகள் விண்ணப்பிக்காததால் எங்களதுவிண்ணப்பங்களுக்கு நஷ்ட ஈடு தரமுடியாதென 3மாதகாலத்தின் பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவித்துள்ளனராம்.

அடுத்த சிறு போகத்தை விளைவிக்க இப்பணம் கிடைக்குமென எதிர்பார்த்திருந்த இப்பகுதி விவசாயிகள் இப்போது பெரும் ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர். [ந.நி]

---

## 'ஆகாஷ்வாணி' இனி இல்லை

சென்னை, மே. 8

தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மற்றும் இதர வானெலி நிலையங்களில் அறிவிப்பின்போது ஆகாஷ்வாணி என்று குறிப்பிடுவதற்குப் பதில் வானெலி எனக் குறிப்பிடப்படும் என்று அறியப்படுகிறது.

மத்திய அரசாங்க தகவல் ஒலிபரப்பு மந்திரி திரு.சே.கே.ஜாவுடன்தமிழ்நாடு ஹரிஜன நல மந்திரி டாக்டர் சத்தியவாணி முத்து பேச்சுவார்த்தை நடத்திய பின் இம்முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

---

## அழுகிய நிலையில் சடலம்

### தற்கொலை என தீர்ப்பு

பலாலி, திங்கள்

இசைக்கருவி திருத்துபவரும் மலையாளியுமான வி. கே. தாமோதரம் என்பவரின் சடலம் இளவாலை உயனை என்ற இடத்தில் அழுகிய நிலையில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. அ. குமரகுரு மரண விசாரணை நடத்தினுர்.

விசாரணையின்போது சாட்சியமளித்த காங்கேசன் துறை சப்.இன்பெக்டர்திரு. குரூஸ் இறந்தவர் எழுதிவைத்திருந்ததாகக்கருதப்படும் ஒரு கடிதத்தைசமர்ப்பித்தார். அக்கடிதத்தில் மரணமானவர், 'என்னுடைய சாமான்களை ஒருவர் அபகரித்துக் கொண்டபடியாலும், கள்ளத்தோணியில் வந்தவர் என்று பொலிசாரிடம் ஒப்படைக்கப் போவதாக ஒருவர் பயமுறுத்தியதாலும் எனது உயிரை மாய்த்துக்கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

சங்கீத வித்துவான் சண்முகரத்தினம் சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவரை 25 ஆண்டுகளாகத் தெரியுமென்றும் தமக்கு அவர் கருவிகள் திருத்திக்கொடுத்திருப்பதாகவும், 1964ம் ஆண்டுக்குப் பின் அவரை தாம் காணவில்லையென்றும் கூறினுர்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## மற்றுமொரு சடலம்

பலாலி, திங்.

கீரிமலை மலைக்குடா என்ற இடத்தில் அழுகிய நிலையில் ஒரு சடலம் அடையாளம் காணமுடியாத அளவு மோசமாகவிருந்தது.

கடலில் மூழ்கி மரணமாகியிருக்கலாம் என்று திடீர் மரண விசாரணை அதிகாரி அறிவித்துள்ளார். சடலத்தை படம் எடுக்கும்படி பொலிசாருக்கு அவர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து சடலம் பல கோணங்களில் படம்பிடிக்கப்பட்டது. சடலத்திலுள்ள சில அடையாளங்களைப் பார்க்கும் போது இறந்தவர் இந்திய முஸ்லிம் மீனவராக இருக்கலாம் என்று காங்கேசன் துறை சப் இன்ஸ்பெக்டர் குருஸ் மரண விசாரணையில் தெரிவித்தார்.

---

## பயிற்சி தேவை

புன்னலைக்கட்டுவன், திங்கள்

1969-ம் ஆண்டுக்குப்பின் பொதுத் தராதர ஆரம்ப வகுப்பிற்குக் கீழுள்ள வகுப்புகளில் பயிற்றப்பட்ட ஆசிரியரே பாடங்களைப்போதிப்பரென கல்வித்திணைக்களச் சுற்றறிக்கை கூறுகிறது.

பட்டதாரிகளாயினும் பயிற்றப்படாவிடின் அவர்கள் கீழ் வகுப்புகளிற் போதிக்க அனுமதிக்கப்படமாட்டார்களெனத் தெரிகிறது.

---

## 'தமிழில்தொடர்பு கொள்ளுங்கள்'

கிளிநொச்சி, திங்கள்

''கிளிநொச்சிப் பகுதியிலுள்ள மக்களின் முறையீடுகளை விசாரிப்பதற்கு அவர்களை யாழ்ப்பாணம் அழைக்காமல், யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களை இங்கு அனுப்பி வைத்து விசாரிக்க வேண்டும்'' என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

பண்டிதர் இரத்தினத்தின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இப்பகுதியிலுள்ள தமிழ் மக்களோடு உங்கள் அலுவலகம் தமிழில் தொடர்பு கொள்ள வேண்டுமென்பதை பலமுறை வற்புறுத்தியும், விஷேட மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியும், இன்னமும் ஆங்கிலம் தெரியாத மக்களுக்கு ஆங்கிலத்திலேயே கடிதம் அனுப்புவது விந்தையாக இருக்கிறது. இனியாவது தமிழில் தொடர்பு கொள்வதற்கு உறுதியளிப்பீர்களா?

---

## தீர்ப்பு ஒத்திவைப்பு

### ஆஸ்பத்திரியில் பெண் மரணம

யாழ்ப்பாணம், செவ்.

வேலணையைச் சேர்ந்த சின்னத்தப்பி நாகம்மா [52 வயது] பெண் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமானது சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினுர்.

மரணமானவருக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சையளித்த டாக்டர் நீலரஞ்சித ராஜா சாட்சியமளிக்கையில்காலஞ்சென்றவரை 'வார்ட்டில்' தான் பார்த்தபோது அவர் மயக்கமுற்றிருந்ததோடு, மூச்சுவிட அவஸ்தைப்பட்டதாகவும், அவரிலிருந்து நச்சுத்தன்மை வீசியதாகவும், என்ன காரணத்தினுல் இம்மரணம் விளைந்திருக்கலாம் என்று சரியாகத் தெரிவிக்க முடியாதென்றும் தெரிவித்தார்.

காலஞ்சென்றவரைப் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் சுப்பிரம்ணியம், காலஞ்சென்றவரது வயிற்றுள் சாப்பாட்டுடன் நச்சுத்தன்மை இருந்ததாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து அது என்ன என்று பரீட்சிப்பதற்காக உள்ளுறுப்புகளைக் கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். [ந.நி.]

---

## கண்டேவியா மாலைதீவு பயணம்

கொழும்பு, திங்.

இந்திய ஹைகமிஷனர் திரு.வை.வி. கண்டேவியா மாலைத்தீவில் தமது நியமனப் பத்திரங்களை சமர்ப்பித்து அந்நாட்டின் ஸ்தானிகராகவும் பதவி ஏற்றுக்கொள்ளுமுகமாக இன்று புறப்பட்டுச் சென்றுர்.

திரு. கண்டேவியா இம்மாதம் 9-ம் திகதி தமது நியமனப் பத்திரங்களை மாலைதீவு மன்னர் சுல்தான் முகமத் பரீத் டிடியிடம் சமர்ப்பிப்பார். அங்கு அவர் மாலைதீவு பிரதமரையும் இதர மந்திரிகளையும் சந்திப்பார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org